திருசிற்றம்பலம்.

# <u>அமர்நீதி நாயனார்</u>

இறைவனார் அடி எடித்துக் கொடுக்க சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த திருத்தொண்டத்தொகையின் முதர்பாடலின் இறுதியாக அல்லி மென்முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன்; ஆரூரன் ஆரூரின் அம்மானுக்காளே எனக்குறிப்பிடும் அமர்நீதி நாயனாரின் வரலாற்றினை இங்கு காண்போம்.




சோழவளநாடு சோறுடைத்து என்ற சிறப்பிற்கு காரணமாய தன்னில் ஈடில்லா பொன்னி பாயும் நாட்டில் அளிமொய்க்கும் எழில் சூழ் பொழில் நிறைந்த செழுமைமிக்க திருப்பதியாவது பழையாறை என்பதாகும்.மணிகளால் சூழப்பெற்ற தெருக்களையுடைய அப்பதிக்கு அணிபேர்க்கும் வண்ணம் வணிகர் குலத்தில் தோன்றியவர் அமர்நீதி நாயனார் என்று போற்றப் பெறும் சிவனடியார் ஆவார்.

சிந்தையில் கொள்வதெல்லாம் சிவனடியேயன்றி வேறொன்றும் இல்லாதவர். அடியார்கள் மனம்குளிர அமுது செய்வித்து அவர்கள் விருப்பத்திற்கேற்ப கீளும் உடையும் தருவதே தலையாய அருஞ்செயலாக்க் கொண்டு பெரும் செய்வத்தையெல்லாம் நற்கருமம் என்று தாம் நண்ணியதன் பொருட்டே செலவு செய்தார். அவர் திருநல்லூர் திருவீழிவினைக் கண்டு மகிழ்ந்து நிர்மலனான இறைவனாரை வணங்கி அடியார்கள் அமுது கொள்ளத் தக்க வண்ணம் திருநல்லூரில் திருமடம் ஒன்று அமைத்தார். தாமும் தாமும் தம் சுற்றமுமாக பழையாறை நீங்கி திருநல்லூர் வந்தனைந்தார். அந்நாளில் ஓர் நாள், திருநல்லூர் உறை திரு நீலகண்ட இறைவனார், தமது கோவனத்தின் பெருமையை அன்பர்கள் அறியும் வண்ணம் செய்ய வேண்டி, திங்கள் மதிசூடிய திருநீலகண்டப்பெருமகனார் வேதியகுலத்தின் தோன்றிய ஒரு பிரம்மச்சாரி வேடம் கொண்டு அமர்நீதியாரின் திருமடத்தை அணுகினார்.

சிவந்த மேனியும், செஞ்சடையோடும் திரிபுண்டரமாய் அணிந்த வெண்ணீற்றோடும், வெண்புரிநூலும், மான்தோலும், கைவிரல் பொருந்திய மரகத அணிகலமும், ஒருவகை தருப்பையைத் திரித்த அரைஞாணும் தரித்து அதில் அணிந்த கோவணமும் கொண்டு, கையில் தாங்கியத் தண்டு, அதில் இரண்டு கோவணமும் திருநீற்றுப் பையும் கொண்டவராய் எம்பெருமான் நடந்து வந்து அமர்நீதியார் திருமடத்தை அடைந்தார். அடியார் கோலத்தைக் கண்டு அளப்பரிய ஆன்ந்ததால் உளம்பூரித்து உடல் புளகாங்கிதம் அடைந்த அமர்நீதியார் விருந்தினரை வரவேற்று அமுதுண்ண அன்புடன் வேண்டினார். அமர்நீதியாரைப்பார்த்து தவக்கோலப் பெருமான், "நீவிர் அடியார் மீதுகொண்ட அன்பின் மிக்கால் அவர்களுக்கு அமுதூட்டி, கந்தை, கீள், உடை ஆகியனவற்றைக் கொடுப்பது கேள்வியுற்று யாம் இங்கு வந்தோம் யாம் காவிரியில் நீராடி வரும் போது மழை வர நேரினும் அதுபோழ்ந்து உதவுவதெற்கென இக்கோவனத்தைப் பாது காத்து தருவீராக" என்று கூறி தம் தண்டினின்று அவிழ்த்த வெண்கோவனத்தை அமர்நீதியாரிடம் அளித்தார்.

இதுவே தாம் செய்த பெரும் பேறு என்ற உயர்வான சிந்தை கொண்ட அமர்நீதியாரும் அதனைப் பெற்றுக் கொண்டு, ஒப்பற்றக் காவல் பொருந்திய ஒரு தனியிடத்தில் வைத்தார். வேடமிட்டு வந்த வேதியரோ, நாடகமாடி நாயனார் வைத்திருந்த கோவணத்தை மறையச் செய்தார். நீராடச் சென்ற மறையவர் மழை வெள்ளத்தில் நனைந்து திரும்பிவந்தார். அலைத் ததும்பும் காவிரித்திரையில் தான் நீராடினாரோ, அன்றி தலை தாங்கி நின்ற கங்கையில் தான் குளித்தாரோ? அம்பலக்கூத்தனின் அந்தரங்க விளையாட்டினை யாரறிவார்?. நீராடி வரும் வேதியர் நிறைவுடன் அமுதுண்ண பல்லாற்றாலும் தயார் நிலையிலிருந்தார் அமர்நீதியார். வந்திருந்த மறைகுலத்தாரோ,"குற்றமில்லா அடியவரே!

யாம் மழை நீரில் நனைந்து வந்தமையால் தண்டில் கட்டிவைத்தக் கோவணத்தால் இப்போது பயன் ஒன்றுமில்லை. எனவே நாம் பாதுகாத்து வைக்கும்படி உம்மிடம் தந்த சிறப்புமிக்க அக்கோவணத்தைக் கொண்டு வாருங்கள்" என்று கூறினார் தங்கள் சித்தம் அதுவானால் தாங்கள் தந்த கோவணத்துடன் இதோ வருகிறேன் என்று உள்ளேச் சென்றார். அந்தோ! இஃது இறைவன் திருவிளையாட்டன்றோ? வைத்த இடத்தில் மட்டுமல்லாது இல்லாள் மற்றும் இல்லிலுள்ளோர் மூலமும் தேடியும் கிடைக்கவில்லை. பதறிப்போனார் அமர்நீதியார். இருப்பினும் மனம் தளராது மற்றொரு பூந்துகில் கோவணத்தோடு வந்து மணிமன்றில் ஆடி மறையவரிடம் கொடுத்து அணிந்து கொள்ளுமாறு வேண்டினார். மறையவர் தந்த கோவணம் மறைந்து விட்ட மாயத்தையும் எடுத்துக் கூறினார்.

மறையவரோ, "அமர்நீதியாரே நீங்கள் கூறுவது நன்றாக இருக்கிறது. ஒளிபொருந்திய எனது உயர் கோவணத்தைக் கவர்ந்து கொள்ளவே உமது ஏற்பாடு" என்று சினத்துடன் கூறினார். "ஐயன்மீர்! இது யாம் அறியாது நிகழ்ந்த தவறு. மன்னித்தருளவும். தங்களது கோவணத்திற்கு என்பாலுள்ள மற்றையகோவணங்கள் நேராகாதெனின், தங்கள் எற்றுக் கொள்வீராயின் தங்களது கோவணத்திற்கு ஈடாக என்பால் வைத்துள்ள ஆடை அணிகலன்கள் அத்தனையும் வைத்து நேர் செய்கிறேன். கனிவுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றுவேண்டினார். கரத்தில் மானேந்தி வரவேண்டிய மறை நாயகன் தான் கொண்டுவந்தத் தண்டில் கட்டியிருந்த கோவணத்தை அவிழ்த்து தராசுத் தட்டில் வைத்தார். "காணாமல் போன கோவணத்திற்கு ஈடானது என் கைத்தண்டில் கட்டியிருந்த கோவணம் இதற்கு நேர் செய்யும்" என்று கூறினார். அதுகேட்டு, இந்தவகையில் ஏற்றுக்கொண்ட மறையவரை வணங்கி தலையின் மறுதட்டில் பூந்துகிலாடைகளையும் பொன்னையும், மணியையும் வைத்தார், என்ன விந்தை இறைவனின் கோவணம் வைதிருந்தத் தட்டு தாழ்ந்தேயிருந்தது. தம்மிடமுள்ள செல்வங்கள் அனைத்துமே வேதியரின் அந்தக்கோவணத்தை நேர்செய்ய முடியவில்லை என்பதையுணர்ந்தார் அமர்நீதியார். மீண்டும் இறைவனிடம் இறைஞ்சினார் "ஐயன் மீர், என்னிடமுள்ள அனைத்து செல்வங்களையும் துலையின் தட்டில் வைத்துவிட்டென் ஆயினும் துலையின் தலை என்பக்கம் சாயவே இல்லை. இனி எம்மால் எது செய்ய இயலும். நானும் ,என் இல்லாளும் , என் செல்வமகனுமெ எஞ்சியுள்ளோம். தகுமானால் நாங்களும் என்பக்கத் தட்டில் ஏறி நேர்செய்வதற்கு உமதருள் இருப்பதாக" என்று கூறினார். எவ்வகைக் குற்றமுமில்லாத நாயனார் இவ்வாறு இரங்கிக் கூறவே, இறைவரும் அளப்பரிய அன்புக்கொண்ட அடியவரை பிறவிப் பெருங்கடலின்றும் கரையேற்றுவதையே நோக்கமாக வந்திறங்கியவனல்லவா? ஆகவே அதன் அடையாளமாக இந்த நிலைமையில் துலையின் தட்டில் ஏற இசைந்தனன்.

இவ்விசைவால் முற்றிலும் மகிழ்ந்துபோன நாயனார், அள்ளிமுடித்த அழகியக் கூந்தல் கொண்ட தமது மனைவியொடும், துள்ளிவிளையாடும் தம் செல்லமகனொடும் இறைவனை வணங்கிக் கூறலுற்றார் "இழைத்த அன்பால் இறைவனின் திருநீற்றிலே கொண்டு செலுத்திய அடிமைத்திறத்திலே இது நாள்வரை நாங்கள் தவறவில்லை என்பது உண்மையானால் இப்பெருந்துலை நேர்நிற்பதாக எனக்கூறி பொழிலால் எழில் சேர்ந்த திருநல்லூர் உறையும் இறைவரை வணங்கி பஞ்சாக்கர மந்திரத்தை ஓதி துலையின் தட்டில் ஏறினார் அடியார் பெருமகனார் தம்மையேத் துறந்து துலையில் ஏறியவுடன், அண்டசராசரத்திற்கும் தலைவனான இறைவரின் திரு அறையில் கொண்ட கோவணமும் அன்பில் குறையாத அடியாரின் தொண்டு உள்ளம் ஒப்பானவையாகையால் திலையும் நேர்நின்றது. இவ்வடியாரின் பெருமையைப் பார் முழுவதுமேயறிந்து யாவருக்குமே அதிசய உணர்ச்சியுண்டாக, வணங்கி நின்றனர். ஆதவனின் ஒளிவெள்ளம் வானில் மறையும் வண்ணம் கற்பக மலர்களைத் தேவர்கள் மழையெனப் பொழிந்தனர். இத்தகைய பூமழை வெள்ளத்தின் நடுவே திரிபுண்டரம் தரித்த இறைவர், ஒரு பாகத்தில் வைத்த உமையாரோடு சீர்மிகு திருநல்லூர் பதியில் தம் ஆதிகோலம் பூண்டு காட்சியளித்தார்.

குமரனோடும் குலர்கொடியாளோடும் அமர்நீதியார் இறைவனின் அருளில் மூழ்கி நின்றனர். சிவபெருமானின் திருவருளால் அப்பெரிய துலாக்கோலே விமானமாகி மூவரையும் கொண்டு சிவலோகம் சென்றது.

"கோதில் அன்பரும் குடும்பமும் குறைவறக் கொடுத்த ஆதிமூர்த்தியாருடன் சிவபுரியினை அணைந்தார்" என்கிறார் சேக்கிழார் சுவாமிகள்.